# UNIT – IX : DEVELOPMENT ADMINISTRATION IN TAMIL NADU

# SOCIAL WELFARE SCHEMES

# WOMEN / பெண்கள்

## 1. Social Legislations of Tamil Nadu Government to prevent crime against women
**பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்காக தமிழ்நாடு அரசு வகுத்துள்ள சமூகச் சட்டங்கள்**

- ✓ "Protection of Women from Domestic Violence Act, 2005",
- ✓ "Dowry Prohibition Act, 1961",
- ✓ "Protection of Women from Sexual Harassment at work place Act, 2013" and
- ✓ "Tamil Nadu Hostels and Homes for Women and Children (Regulation) Act, 2014".
- ✓ The Prohibition of Child Marriage Act, 2006.

- ✓ 'குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005',
- ✓ 'வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961',
- ✓ பணிபுரியும் இடத்தில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2013,
- ✓ தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2014

## 2. Role of Service Home in Tamil Nadu
**தமிழ்நாட்டில் உள்ள சேவை இல்லங்களின் பணி**

Widows, deserted wives, economically backward women and girls rescued from child marriage who are neglected by their families are taken care of in the Service homes.

Nine Government Service Homes, one each at Chennai, Salem, Cuddalore, Thanjavur, Tirunelveli, Sivagangai, Madurai, Krishnagiri and Perambalur are functioning in Tamil Nadu.

The Service Homes provide suitable accommodation, food, health and medical facilities.

The inmates can also pursue their schooling if they had discontinued their studies.
The widows and deserted wives are also permitted to bring up their children in a conducive atmosphere in these Service Homes.

- விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தை திருமணத்திலிருந்து மீட்கப்பட்டு, குடும்பத்தினரால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு பராமரிப்பு அளிக்கும் வகையில், தமிழகத்தில் 9 அரசு சேவை இல்லங்கள் சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, மதுரை, கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

- இந்த சேவை இல்லங்கள், இல்ல உறைவாளர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றை அளிக்கின்றது.

- பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த உறைவாளர்களும் தொடர்ந்து பயில இயலும். சேவை இல்லங்களில் தங்கி பயன்பெறும் விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் தங்களுடன் தங்களது குழந்தைகளையும் உடன் தங்க வைத்து பராமரித்துக் கொள்ள ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு தாய் தன்னுடன் அதிகபட்சமாக 3 குழந்தைகளை தங்க வைத்துக் கொள்ளலாம்.

### 3. Women Industrial Co-operative Societies in Socio-Economic Empowerment of Women.

**பெண்களுக்கான சமூக பொருளாதார அதிகாரமளித்தலில், மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்களின் பங்கு**

These Industrial Co-operative Societies are exclusively for women below poverty line. Women above the age of 18 years and below poverty line can become the members of these societies. They are provided with continuous employment opportunities throughout the year. They stitch 4 sets of uniform for School Children. By the above measures of empowering women, the economic needs are fulfilled by providing them with skill and knowledge to enable them to lead an independent life with increase in income.

There are 98 Women Industrial Co-operative societies functioning under the control of Commissionerate of Social Welfare.

**மகளிரின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள்:**

- வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பெண்கள் நலனுக்காக மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் சமூக பொருளாதார திட்டங்களை சமூக நல ஆணையரகம் செயல்படுத்தி வருகிறது.

- இக்கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் சமூக பொருளாதார நிலையையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு கூட்டுச் செயல்பாடுகளின் மூலம் உதவுவதே கூட்டுறவுத் தத்துவமாகும். இத்தொழில் கூட்டுறவு சங்கங்கள், உறுப்பினர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கு ஒரு அடித்தளமாக திகழ்கிறது.

- சமூகத்தில் நலிவுற்ற பிரிவிலிருந்து வரும் மகளிருக்காகவே இத்தொழில் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் 18 வயதுக்கு மேல் மற்றும வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்கள் உறுப்பினராகலாம்.

- இவர்கள் நான்கு இணை சீருடைகளை தைப்பதன் மூலம் போதிய வருவாயை பெறும் வகையில் வருடம் முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் அவர்களின் பொருளாதார தேவைகள் நிறைவு செய்யப்பட்டு

- அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் பொருளாதார சுதந்திரத்துடன் கூடுதல் வருமானம் பெற்று சுதந்திரமாக செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- சமூக நல ஆணையரகத்தின கீழ் 98 மகளிர் தையல்தொழிற் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன்.

## ECONOMIC WOMEN EMPOWERMENT

### 4. Tamil Nadu Corporation for Development of Women
**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்**

Tamil Nadu Corporation for Development of Women (TNCDW) was established in 1983 by the Government of Tamil Nadu with the objective of making the women socially and economically empowered and ensuring them education, employment, economic development to become socially equal self-reliant and self-confident.

**TNCDW is implementing the following important schemes**

- ✓ Tamil Nadu State Rural Livelihoods Mission (TNSRLM): A scheme for poverty reduction and livelihoods promotion in rural areas funded by Centre and State in the ratio of 60:40.
- ✓ ii. Tamil Nadu Urban Livelihoods Mission (TNULM): It is a scheme for the upliftment of urban poor funded by Centre and State in the ratio of 60:40. 244
- ✓ National Rural Economic Transformation Project (NRETP): The project is being implemented in 20 rural blocks in 5 Districts and funded by Centre and State in the ratio of 60:40.
- ✓ Amma Two Wheeler Scheme (ATWS): Subsidy based Amma Two Wheeler Scheme, fully funded by Government of Tamil Nadu is implemented for the benefit of working women to ease their commute to their working place
- ✓ Mahalir thittam

**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்**

**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்:**

- "ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும் தன்னம்பிக்கையும் பெறவேண்டும்".

- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983ஆம் ஆண்டு, பெண்கள் சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இரண்டு பெருந்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- **மகளிர்திட்டம்:** மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

- **மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:** மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 75 : 25 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

## 5. Mahalir Thittam
**மகளிர் திட்டம்**

TNCDW implemented the International Fund for Agricultural Development (IFAD) assisted Women Development Project by forming Self Help Groups (SHGs) among women who were involved in agriculture based activities during 1991-92 in Dharmapuri District and later extended to Salem, South Arcot (Cuddalore and Villupuram), Madurai and Ramanathapuram Districts in a phased manner upto 1994.

Based on the success of this Women Development Project, the State Government launched "Mahalir Thittam", a State Funded programme to all Districts.

Under this scheme, SHGs were formed with women members, provided with systematic training, networked through federations and provided bank linkages for taking up income generation activities for their socio-economic empowerment.

All the projects/programmes related to Poverty alleviation and development implemented by both TNCDW and World Bank are the improved versions of Mahalir Thittam only.

**மகளிர்திட்டம்:**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், 1991- 92 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் வேளாண்மை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரிடையே சுய உதவிக் குழுக்களை அமைத்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்தியது.

இத்திட்டம் சேலம், தென்னாற்காடு (கடலூர் மற்றும் விழுப்புரம்) மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு 1994 ஆம் ஆண்டு வரை படிப்படியாக விரிவு படுத்தப்பட்டது.

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் இந்த வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு மகளிர் திட்டம் என்ற திட்டத்தினை மாநில அரசின் நிதியுதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் துவக்கியது.

அதன் பிறகு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மாநிலத்தின் மகளிர் வளர்ச்சிக்காக சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் முக்கிய நிறுவனமாகத் திகழ்கிறது.

## 6. Tamil Nadu State Rural Livelihoods Mission (TNSRLM)
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**

Tamil Nadu State Rural Livelihoods Mission is implemented by the Government of Tamil Nadu from the year 2012-13. The objectives of TNSRLM are to build strong and vibrant institutional platforms of the poor in the rural areas which enable them to increase their household income through livelihood enhancements and access to financial and other services. Under this scheme, the target group comprises of poor, very poor, vulnerable and differently abled.

- இயக்கம் உருவாக்கப்பட்ட ஆண்டு 2012 – 13

**நோக்கம்**

ஊரக ஏழை மக்களுக்கான வலுவான உயிரோட்டத்துடன் கூடிய அமைப்புகளை உருவாக்கி, நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பல்வேறு சேவைகளையும் முறையாகப் பெற வழிவகை செய்து, வாழ்வாதாரத்தை உயர்த்தி குடும்ப வருமானத்தைப் பெருக்குவது.

இந்த திட்டத்தின் கீழ், ஏழை, மிகவும் ஏழை, பாதிக்கப்படக்கூடிய மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயனடைவர்.

## 7. National Rural Economic Transformation Project (NRETP)
**தேசிய கிராமப்புற பொருளாதார புத்தாக்க திட்டம்**

Subsequent to the closing of National Rural Livelihoods Project (NRLP) in 2018-19, which aimed to provide additional pro-poor investments along with the provision of skilled technical assistance in the implementation of NRLM, the Ministry of Rural Development, Government of India has introduced a new scheme namely National Rural Economic Transformation Project (NRETP) from 2019-20 with the funding by Government of India and Government of Tamil Nadu in the ratio of 60:40.

2018-19ஆம் ஆண்டில் தேசிய கிராமப்புற வாழ்வாதாரத் திட்டம் (NRLP) க்கு மாற்றாக ஏழைகளுக்கு ஆதரவான முதலீடுகளையம், NRLM அமலாக்கத்தில் திறமையான தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவதை நோக்கமாக கொண்ட இந்திய கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் 2019-20 முதல் இந்திய அரசு மற்றும் தமிழக அரசு 60 : 40 என்ற விகித நிதியுதவியுடன் தேசிய கிராமப்புற பொருளாதார மாற்ற திட்டம் (NRETP) என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

**8. STEP Scheme**
**STEP திட்டம்**

The Department of Women and Child Development (WCD), which is regulated under the Government of India, has introduced the Support to Training and Employment Programme for Women (STEP) Scheme in 1986 – 87. The scheme intends to provide training in skills development to ensure employment opportunities to women and enable them to become self-employed entrepreneurs

ஸ்டெப் (STEP) திட்டமானது, மத்திய துறை திட்டமாக 1986 – 87ல் தொடங்கி வைக்கப்பட்டதாகும். இந்தத் திட்டமானது, மகளிரை நிலையான குழுக்களாக ஒருங்கிணைத்தல், சந்தைப்படுத்துதல் இணைப்புகளை ஏற்படுத்துதல், ஆதரவு சேவைகள் மற்றும் கடன் பெறுதல், சுகாதார பாதுகாப்பு, கல்வி மற்றும் இதர தகவல்கள் போன்றவற்றில் ஈடுபடுத்துதல் வாயிலாக அவர்களது வேலைவாய்ப்புத் திறனை நீடித்த கால அளவிற்கு மேம்படுத்தி, அவர்களின் வாழ்க்கையில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டதாகும். இந்தத் திட்டமானது அவர்களது உற்பத்தித் திறனையும் வருவாய் உற்பத்தியையும் அதிகரிக்கும் நோக்கத்தில், பாரம்பரியமான 10 துறைகளில் வேலைவாய்ப்பை ஏற்படுத்துகிறது. அவை, வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம், கைத்தறி, சிறு தொழில்கள், காதி மற்றும் கிராம தொழில்கள், பட்டு வளர்ப்பு, தரிசு நில மேம்பாடு மற்றும் சமூகக் காடுகள் திட்டம் ஆகும்.

**9. Rashtriya Mahila Kosh**
**ராஷ்ட்ரிய மகிளா கோஷ்**

RMK is a national credit fund for women under the aegis of the Ministry of Women and Child Development. It was established in 1993 for socio-economic empowerment of women.

It aims to provide micro-credit to the women through Intermediary Micro Finance Organizations (IMOs) and Women Self Help Groups (SHGs) and to augment their capacities through multi-pronged efforts.

ராஷ்ட்ரிய மகிளா கோஷ் என்பது, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் ஆதரவின்கீழ் செயல்படுத்தப்படும் ஒரு தேசிய அளவிலான மகளிருக்கான கடன் வழங்கும் ஒரு நிதியம் ஆகும்.

இது 1993 ஆம் ஆண்டு மகளிருக்கு சமூக பொருளாதார அதிகாரம் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டது. இது அமைப்பு சாரா பிரிவுகளில் உள்ள மகளிருக்கு இடைநிலை நுண் நிதி அமைப்புகள் (Intermediary Micro Finance Organizations) மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் (Women Self Help Groups) வாயிலாக முன் பின் தொடர்புகளுடன் நிதிச் சேவைகளை அளிப்பதையும் பன்முனை முயற்சிகள் வாயிலாக அவர்களின் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டுள்ளது.

**10. Mahalir Sakthi Maiyyam (Mahila Shakti Kendra – MSK)**
**மகளிர் சக்தி மையம்**

Mahalir Sakthi Maiyyam Scheme (MSK) was introduced by Government of India in the year 2017-2018 under the umbrella scheme of "Mission for Protection and Empowerment for Women".

The scheme is to create an environment in which women realize their full potential, through one stop convergent support services to health care, quality education, skill training, employment, social security and digital literacy across the State. The cost sharing pattern of this scheme is 60:40 between Central and State Governments.

மகளிர் சக்தி மையம் திட்டம் திட்டம் 2017-18ஆம் ஆண்டில் "பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல்" என்ற திட்டத்தின் கீழ் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

மாநிலம் முழுவதும் சுகாதாரப் பராமரிப்பு, தரமான கல்வி, திறன் பயிற்சி, வேலைவாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் எண்ம கல்வியறிவு ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த சேவைகள் மூலம் பெண்கள் தங்கள் முழு திறனை உணரும் சூழலை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த திட்டத்தின் செலவு பகிர்வு முறை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே 60 : 40 ஆகும்.

11. **Avvaiyar Award**
**ஔவையார் விருது**

- ✓ On the March 8th i.e. the International Women's Day, the "Avvaiyar Award" is given to eminent women who have rendered excellent service in the field of Social reform, Women development, Communal harmony, Service for language, Service in various discipline in Art, Science, Culture, Press, Administration, etc.,

- ✓ Chief Minister honoured R. Kannagi, 52, from Tiruvannamalai, with the Tamil Nadu government's Avvaiyar award for the current year, recognising her work for the uplift of rural women for over 18 years.

- ✓ Ms. Kannagi, a burial ground assistant, is popular among the women's self help groups (SHGs) in Tiruvannamalai district. She works in a crematorium near Esanyam Ground, a facility under the maintenance of Mahadeepam Makkal Nala Arakkatalai.

- இவ்விருது தமிழக அரசால் வழங்கப்படுகிறது. உலக மகளிர் தினமான மார்ச் 8-ந் தேதி அன்று, சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிக்கை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில், இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து, அவ்வையார் விருது எனும் உயரிய விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

- இவ்விருது பெறுபவருக்கு 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் ₹1.00 லட்சம் காசோலை, சால்வை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகிறது.

## WOMEN IN DIFFICULT CIRCUMSTANCES

12. **"Protection of Women from Domestic Violence Act 2005"**
**"பெண்களுக்குக் குடும்ப வன்முறைகளில் இருந்து பாதுகாக்கும் சட்டம் 2005"**

**PROTECTION OF WOMEN FROM DOMESTIC VIOLENCE ACT, 2005:**

The Act ensures a woman's right to reside in her matrimonial home. This Act has a special feature with specific provisions under law which provides protection to a woman to „live in violence free home'.

Though this Act has civil and criminal provisions, a woman victim can get immediate civil remedies within 60 days.

Aggrieved women can file cases under this Act against any male adult perpetrator who is in domestic relationship with her. They can also include other relatives of the husband and male partner as respondents to seek remedies in their case.

**Salient features of the Act:**

- ✓ Ensures Right to Residence under sec 17.
- ✓ Ensures economic relief by recognising economic violence.
- ✓ Recognises verbal and emotional violence.
- ✓ Provides temporary custody of child.
- ✓ Judgements within 60 days of filing of the case.
- ✓ Multiple Judgements in a single case.

**PROTECTION OFFICERS**

- ✓ Under the Domestic Violence Act, 2005, Protection Officers have been appointed by the Government to help the aggrieved woman in filing the case
- ✓ The Protection Officer facilitates the women to approach the court by providing legal aid and get appropriate relief from the courts concerned.

**குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005**

- சமுதாயத்தில் வன்முறை இல்லாத குடும்பத்தில் பெண்கள் வசிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சிறப்பு அம்சங்கள் உள்ளடக்கிய சட்டமாகும். இச்சட்டம் பெண்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கிறது.
- மேலும் இச்சட்டம் உரிமையியல் மற்றும் குற்றவியல் பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளித்த 60 நாட்களுக்குள் தீர்வுபெற முடியும்.
- இச்சட்டத்தின் கீழ் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தனது கணவர் மற்றும் கணவரைச் சார்ந்த உறவினர்கள் மீதும் மற்றும் திருமணம் போன்ற உறவில் வாழும் ஆண் நபரை எதிர்மனுதாரராக சேர்த்து நிவாரணம் கோரி வழக்கு தொடருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:**

- பிரிவு 17 ன் கீழ் பெண்கள் தனது புகுந்த வீட்டில் வசிப்பதற்கான உரிமையை உறுதி செய்தல்
- பொருளாதார வன்முறைக்கு எதிராக நிவாரணம் பெறுவதை உறுதி செய்தல்
- வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளை கண்டறிதல்
- பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது குழந்தைகளைத் தற்காலிகமாக தன்னுடன் வைத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு வழங்குதல்
- வழக்கு பதிவு செய்த 60 நாட்களுக்குள் நீதிமன்ற தீர்ப்பினை பெற்று வழங்குதல்.
- ஒரே வழக்கில் பல தீர்ப்புகளை பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.

## 13. Ujjawala Scheme – 2007
**உஜ்ஜவாலா திட்டம்**

Launched in 2007, 'Ujjawala' is a Comprehensive Scheme for Prevention of trafficking, with five specific components:

- ✓ **Prevention,** which includes formation of Community Vigilance Groups/adolescents groups, awareness and sensitization of important functionaries like policy, community leaders and preparation of awareness generation materials, holding workshops, etc.
- ✓ **Rescue,** for safe withdrawal of the victim from the place of exploitation.
- ✓ **Rehabilitation,** which includes providing safe shelter for victims with basic amenities such as food, clothing, counselling, medical care, legal aid, vocational training and income generation activities, etc.
- ✓ **Reintegration,** for restoring the victim into the family/community (if she so desires) and the accompanying costs.
- ✓ **Repatriation,** to provide support to cross-border victims for their safe repatriation to their country of origin.

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணகரீதியான பாலியல் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுவது மனித உரிமைகளை மீறும் குற்றமாகும். இதனைத் தடுத்திட இந்திய அரசு. 'உஜ்ஜவாலா' என்ற திட்டத்தினை 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளது.

வணிகரீதியான பாலியல் சுரண்டலைத் தடுத்தல், மீட்டெடுத்தல், மறுவாழ்வளித்தல், சமூகத்தில் ஒருங்கிணைத்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விரிவான திட்டமாக உஜ்ஜவாலா திட்டம் அமைந்துள்ளது.

இந்திய அரசின் உதவியோடு, தமிழ்நாட்டில் இத்திட்டம், 8 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 14. Swadhar Scheme
**ஸ்வதார் திட்டம்**

Swadhar Scheme is for women in difficult circumstances, especially destitute widows, women rescued from trafficking, migrant or refugee women affected by natural calamities like flood, earthquake, cyclone, mentally ill women, women victims of terrorist violence, etc., This Scheme provides food, clothing shelter, Vocational Training for the inmates. Income generation programmes and placement are also components of swadhar scheme. Scheme was launched in 2001 by union government

In Tamil Nadu, there are 14 Non-Governmental Organisations implementing this scheme in 12 Districts.
Department of Social Defence is the Nodal Organisation for implementing the Scheme in the State.

கைம்பெண்கள் மற்றும் கணவணால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றோருக்கு உணவு, திறனை வளர்ப்பதற்கான பயிற்சி மற்றும் அவர்களின் எதிர்காலத்தை எதிர்கொள்ள தேவையான தைரியம் ஆகியவற்றுடன் அவர்கள் பாதுகாப்பாக தங்குவதற்கான வசதிகள் சேவை இல்லங்களால் வழங்கப்படுகின்றன.

மேலும் அவர்களின் குழந்தைகள் மற்றும் தண்டனை கைதிகளின் குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விளிம்பு நிலையிலுள்ள மக்கள் தங்குவதற்கும் இச்சேவை மையங்கள் இடமளிக்கின்றன. சேவை இல்லங்கள் முதன்முதலில் தமிழ்நாட்டில் தான் உருவாக்கப்பட்டன. பின்னர், குறுகிய கால தங்கும் இல்லங்கள் (SWADHAR HOMES) என்ற பெயரில் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 14 அரசு சாரா நிறுவனங்கள் 12 மாவட்டங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்தியுள்ளன.

சமூக பாதுகாப்பு துறை இத்திட்டத்தை மாநிலத்தில் செயல்படுத்துகிறது.

## 15. One Stop Centre Scheme (OSC) – SAKHI

SAKHI (ONE STOP CENTRE-OSC) The objective of the One Stop Centre (OSC) Scheme is to provide integrated support and assistance to women affected by violence, both in private and public spaces under one roof and to facilitate immediate, emergency and nonemergency access to a

range of services including medical, legal, psychological and counselling support. The Government has started a One Stop Centre in Chennai on a pilot basis and the centre caters to women in difficult situation by providing them counselling, medical, legal and short stay facilities.

**வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு**

தனியார் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களக்கு ஒரே கூரையின் கீழ் மருத்துவ சட்ட உளவியல் மற்றும் ஆலோசனை வழங்குதல்

ஒரு நிறுத்த மையத்தை அரசு சென்னையில் முன்னோடியாக தொடங்கியுள்ளது. இந்த மையம் கடினமான சூழ்நிலைகளில் பெண்களுக்க ஆலோசனை, மருத்துவம், சட்ட மற்றும் குறுகிய கால வசதிகளை வழங்கிவருகிறது.

## 16. Women Help Line 181
**மகளிர் உதவி எண் 181**

Government of India has allocated the short code 181 as Women Helpline under the Scheme of universalization of Women Helpline. It aims to provide 24/7 immediate and emergency responses and services to women affected by violence through referral services. Information regarding Government programmes and schemes pertaining to women can also be accessed through the Women Helpline (181).

மகளிர் உதவி மையத்தின் உலகமயமாக்கல் திட்டத்தின் கீழ் 181 என்ற எண்ணை மகளிர் உதவி எண்ணாக இந்திய அரசு ஒதுக்கியுள்ளது. 24/7 உடனடி மற்றும் அவசரகால அழைப்புக்கான பதில்களையும் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சேவைகளையும் வழங்குவதை நோக்கமாகக் இவ்வுதவி எண் கொண்டுள்ளது. பெண்கள் தொடர்பான அரசு திட்டங்கள் மற்றும் திட்டங்கள் பற்றிய தகவல்களையும் பெண்கள் உதவி எண் மூலம் அறியலாம்.

## 17. Nirbhaya Fund
**நிர்பயா நிதி**

**Nirbhaya Fund** was set-up in the year 2016 which is administered by the Ministry of Home Affairs, Government of India. It has identified 8 cities including Greater Chennai in the Country to initiate projects for safety of women in public places under Nirbhaya Fund.

நிர்பயா நிதி 2016ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இது இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது. நிர்பயா நிதியின் கீழ் பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பிற்காக திட்டங்களை தொடங்க நாட்டின் விரிவுப்படுத்தப்பட்ட சென்னை உட்பட 8 நகரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

18. **SABLA (11 – 18 years)**
**சப்லா (11 – 18)**

The Rajiv Gandhi Scheme for Empowerment of Adolescent Girls (SABLA) to address the multidimensional problems of Adolescent Girls, has been introduced (during 2011-2012)

The State Government provides 50% financial assistance towards Supplementary Nutrition Component in which the out of school going adolescent girls of 11 - 18 years and school going adolescent girls of age 15 - 18 years who are registered in Anganwadi Centres are provided with supplementary food in the form of Take Home Ration (THR) at the cost of ₹6.50 per individual per day for 300 days in a year.
Under Non Supplementary Nutrition Component, the adolescent girls are provided with IFA tablets, life skill education, nutrition and health education, counselling, health check-up and vocational training.

- வளரிளம் பெண்களின் பல்வேறு பரிமாணங்களில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணும் நோக்கில் இத்திட்டம் (2011 – 2012-இல்) அறிமுகப்படுத்தப்பட்டது.

- அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்யப்பட்ட 11 முதல் 18 வயதுள்ள பள்ளி செல்லாத வளரிளம் பெண்கள் மற்றும் 15 முதல் 18 வயதுள்ள இதர அனைத்து வளரிளம் பெண்களுக்கும் இணை உணவினை வீட்டுக்கு எடுத்து சென்று பயன்படுத்தும் வகையில் வருடத்தில் 300 நாட்களுக்கு, தலா ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ₹ 6.50 செலவில் வழங்கப்படுகிறது. இதற்கான 50 சதவிகித நிதியினை மாநில அரசு அளிக்கிறது.

- வளரிளம் பெண்களுக்கான இணை உணவு அல்லாத பிற பணிகளின் கீழ், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை வழங்குதல், வாழ்க்கைத் திறன் கல்வி, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக்கல்வி அளித்தல், ஆலோசனை வழங்குதல், உடல் பரிசோதனை செய்தல், தொழிற்பயிற்சி அளித்தல் போன்ற நலப்பணிகள் அளிக்கப்படுகின்றன.

## PREGNANT AND LACTATING WOMEN

19. **Indira Gandhi Matritva Sahyog Yojana**
**இந்திரா காந்தி மகப்பேறுநல உதவித்திட்டம்**

- Established year: 2010
- Beneficiary: Pregnant Women and Lactating Mothers

- Cash Incentive: Rs.4000
- Platform: ICDS During (2011-12)

**Tamilnadu Implemented**

- IGMSY with Dr. Muthulakshmi Reddy maternity benefit scheme of Health and Family Welfare Department.

**National Food Security Act, 2012 (Revision)**

- Cash incentive: Rs.6000 (2 instalments)
- From: July 2013

- தொடக்கப்பட்ட ஆண்டு : 2010
- பயனாளி: கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்
- நல உதவி: ரூ.4000
- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் வாயிலாக (2011-12)

**தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டது**

- இந்திரா காந்தி மகப்பே றுநல உதவித்திட்டத்துடன் இணைந்து டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டம்

**தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013 (திருத்தம்)**

- நல உதவி: ரூ.6000 (இரு தவணையாக)
- ஆண்டு: ஜுலை 2013

## 20. Janani Suraksha Yojana
**ஜனனி சுரக்ஷா திட்டம்**

JSY is a 100 % centrally sponsored scheme and it integrates cash assistance with delivery and post-delivery care.

This scheme was launched in 2005 by union government. It is implemented, as part of the Mission in urban and rural areas and an amount of Rs.700/- in rural and Rs.600/- in urban areas for the mothers delivering in Government Institutions.
In Tamil Nadu, the amount is given to the women after delivery, in addition to the financial assistance of Rs.18,000/- per mother under Dr.Muthulakhsmi Reddy Maternity Benefit Scheme.

இத்திட்டம் 2005ஆம் ஆண்டு மத்திய அரசால் தொடங்கப்பட்டுத

குழுமத்தின் ஒருதிட்டமாக. நகரம் மற்றும் கிராமப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரசு மருத்துவ நிலையங்களில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு, ஊரகப் பகுதியில் ரூ. 700-ம், நகர்ப்புறங்களில் ரூ.600-ம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் பெண்களுக்கு மகப்பேறுக்குப் பிறகு இத்தொகை, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நிதி உதவித் திட்டத்தில் ஒரு மகளிருக்கு வழங்கப்படும் ரூ.12,000 நிதியுதவியுடன், கூடுதராக வழங்கப்படுகிறது.

## 21. Janani Sishu Suraksha Karyakram
**ஜனனி சிசு சுரக்ஷா கார்யாக்ரம்**

Janani Sishu Suraksha Karyakram (JSSK) 2011 entitles every pregnant women and sick neonate for free drugs, diagnostics and diet for the duration of the stay, free transport facility from home, inter facility transfer and transport facility back to home. The scheme aims at reducing out of pocket expenses for pregnant women and sick neonates.

**ஜனனி சிசு சுரக்ஷா கார்யக்ரம்** (JSSK)

இத்திட்டம் 2011ஆம் ஆண்டு மத்திய அரசால் தொடங்கப்பட்டது

'ஜனனி சிசு சுரக்ஷா' திட்டத்தின்கீழ், ஒவ்வொரு கருவுற்ற தாய்மார் மற்றும் நோயுற்ற இளஞ்சிசுவும் விலையில்லா மருந்து, மருத்துவ பரிசோதனை, மருத்துவமனையில் தங்கும் நாட்களில் இலவச உணவு, வீட்டிலிருந்து மருத்துவமனைக்கும், மருத்துவ மனையிலிருந்து பரிந்துரை மையங்களுக்கும், சிகிச்சை முடிந்த பின் வீட்டிற்கும் அழைத்து செல்ல இலவச போக்குவரத்து போன்ற வசதிகள் பெற தகுதியானவர்கள்

## 22. National Nutrition Mission (POSHAN Abhiyaan)
**தேசிய ஊட்டச்சத்து இயக்கம்**

Government of India have set up the National Nutrition Mission with a goal to make improvements in the nutritional status of children from birth to 6 years, pregnant women and lactating mothers in a time bound manner in three years, commencing from 2017-2018.

The Goals of National Nutrition Mission are as follows:-

| S. No | Objective | Target |
|---|---|---|
| 1 | Prevent and reduce stunting in children (0-6 years) | By 6% @ 2% per annum |
| 2 | Prevent & reduce under – nutrition (underweight prevalence) in children (0-6 years) | By 6% @ 2% per annum |
| 3 | Reduce the prevalence of anaemia among young children (6-59 months) | By 9% @ 3% per annum |
| 4 | Reduce the prevalence of anaemia among Women and adolescent girls in the age group of 15-49 years | By 9% @ 3% per annum |
| 5 | Reduce Low Birth Weight (LBW) | By 6% @ 2% per annum |

பிறப்பு முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை மூன்று ஆண்டுகளில் 2017-2018 ஆண்டு முதல் மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்திய அரசு தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தை அமைத்துள்ளது.

**தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தின் இலக்கு**

| S. No | Objective | Target |
|---|---|---|
| 1 | Prevent and reduce stunting in children (0-6 years) | By 6% @ 2% per annum |
| 2 | Prevent & reduce under – nutrition (underweight prevalence) in children (0-6 years) | By 6% @ 2% per annum |
| 3 | Reduce the prevalence of anaemia among young children (6-59 months) | By 9% @ 3% per annum |
| 4 | Reduce the prevalence of anaemia among Women and adolescent girls in the age group of 15-49 years | By 9% @ 3% per annum |

| | | |
|---|---|---|
| 5 | Reduce Low Birth Weight (LBW) | By 6% @ 2% per annum |

**23. Women Empowerment**
**பெண்கள் மேம்பாடு**

- Right to Vote for Women (First Time)
- First Woman Deputy Speaker of the Legislative Council (Dr. Muthulakshmi Reddy)
- Devadasi Abolition Bill was passed Act, 1947
- First Time Women were appointed into the police force
- 24 Hour Medical Service: All Primary Health Centres to Assist the pregnant women
- Property rights to women (first time in the country)
- All women police stations
- First time 33% of seats were reserved for women (TN Local body elections)

- முதன் முதலாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது
- முதல் பெண் சட்டமேலவை துணை சபாநாயராக டாக்டர் முத்துலெட்சமி ரெட்டி நியமனம்
- தேவதாசி முறை ஒழிப்பு மசோதா நிறைவேற்றப்பட்டது
- முதல் முறையாக காவல் துறையில் பெண்கள் நியமனம்
- அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கர்ப்பிணி பெண்களுக்கு 24 மணிநேர மருத்துவ சேவை
- நாட்டிலேயே முதன் முறையாக பெண்களுக்கு சொத்தில் சம உரிமைக்கான சட்டம்
- அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன.
- தமிழகத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் முதல் முறையாக பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

# CHILDREN

**24. Cradle Baby Scheme**
**தொட்டில் குழந்தை திட்டம்**

**CRADLE BABY SCHEME**

"Cradle Baby Scheme" started in Salem District during 1992, is an important initiative of the Government to eradicate the evil practice of female infanticide and to save the girl children.

Tamil Nadu is the first State in India in identifying and accepting the problem of female infanticide and lower Child Sex Ratio and swung into action to curb the practice as early as 1992 through the Cradle Baby Scheme.

The Cradle Baby Scheme, the first of its kind in the entire world

In 2001, the Cradle Baby Scheme was revised by setting up full-fledged reception centres at Madurai, Theni, Dindigul and Dharmapuri.

- ✓ பெண் சிசுக்கொலை என்னும் கொடுமையான பழக்கத்தை அறவே ஒழித்து பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக 1992 ஆம் ஆண்டு, சேலம் மாவட்டத்தில் "தொட்டில் குழந்தைத் திட்டம்" துவங்கப்பட்டது.
- ✓ பெண் சிசுவதை மற்றும் குறைந்த பாலின விகிதாச்சாரத்தைக் கண்டறிந்து, 1992ஆம் ஆண்டிலேயே தொட்டில் குழந்தை திட்டத்தின் மூலம் இக்கொடிய நிலையைக் களைந்திட இந்தியாவிலேயே நடவடிக்கை எடுத்த முதல் மாநிலம் தமிழகமாகும்.
- ✓ உலகிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட தொட்டில் குழந்தைத் திட்டம்
- ✓ மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய வரவேற்பு மையங்கள் 2001 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதன் மூலம் இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டது.

**25. "Chief Minister's Girl Child Protection Scheme is forerunner of All Girl Child Schemes in India and World"**
**"முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம், இந்தியா மற்றும் உலகத்தில் உள்ள பெண் குழந்தை பாதுகாப்புக்கான எந்த ஒரு திட்டத்திற்கும் முன்னோடி ஆகும்"**

The Girl Child Protection Scheme, introduced by the Hon"ble Chief Minister of Tamil Nadu in 1992, is a forerunner of all girl child schemes in India and the World.

The scheme has the twin objectives of preventing female infanticide as well as promoting formal education of girls.

**Mode of Deposits under the Scheme**

**Scheme-I:** In respect of girl children born on or after 01/08/2011, an amount of ₹ 50,000 is deposited in the name of each eligible girl child, in the form of fixed deposit

**Scheme-II:** Similarly, for a family with two girl children, an amount of ₹ 25,000 is deposited in the name of each girl child born on or after 01/08/2011 in the form of fixed deposit

The above deposit is renewed at the end of every 5 years and on completion of 18 years of age, the matured amount along with interest will be given to the girl child. To get this benefit, the girl child should appear for 10th standard public examination. Thus, the matured amount will help the girl child to pursue her higher education.

**Impact of the Scheme**

The reduction in the dropout rate of girl children and the increasing trend in the female literacy of Tamil Nadu (from 64.43 percent in 2001 to 73.86 percent in 2011) can be attributed to the Chief Minister"s Girl Child Protection Scheme.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1992-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத்திட்டம் பெண் குழந்தைகளுக்கான திட்டங்களிலேயே இந்தியாவிலும், உலக அளவிலும் முன்னோடித் திட்டமாக விளங்குகிறது.

இந்த திட்டம் பெண் சிசுக் கொலையைத் தடுப்பது மற்றும் பெண்களின் முறைசார்ந்த கல்வியை ஊக்குவிப்பது என்கிற இரு நோக்கங்களைக் கொண்டுள்ளது.

**இத்திட்டத்தின் கீழ் வைப்புத் தொகை வழங்கப்படும் முறை:**

**திட்டம் - I:** இத்திட்டத்தின் கீழ் 01.08.2011 அன்றோ அல்லது அதற்கு பிறகோ பிறந்து குடும்பத்தில் ஒரே பெண் குழந்தை மட்டும் இருப்பின், அப்பெண்

குழந்தையின் பெயரில் நிலையான வைப்புத் தொகையாக 50,000 முதலீடு செய்யப்படுகிறது.

**திட்டம் - II**: இத்திட்டத்தின் கீழ் 01.08.2011 அன்றோ அல்லது அதற்கு பிறகோ பிறந்து, குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் நிலையான வைப்புத் தொகையாக தலா 25,000 முதலீடு செய்யப்படுகிறது.

மேற்படி வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு 18 வயது நிறைவடைந்ததும் திரண்ட வட்டி விகிதத்துடன், கூடிய நிலை வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை, அப்பயனாளிக்கு வழங்கப்படுகிறது.

இப்பயனை அடைய பெண் குழந்தை பத்தாம் வகுப்பு வரை படித்து, பொதுத் தேர்வு எழுதியிருத்தல் வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் முதிர்வுத் தொகை அப்பெண் குழந்தை உயர்கல்வி பயில உதவுகிறது.

## 26. MGR Nutritious Meal Programme
**எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம்**

Tamil Nadu is the first State in India to initiate feeding programme to combat the malnutrition and ensure food security of the school going children.

PT MGR Nutritious Meal Programme provides free lunch on all school working days for children in Primary and Upper Primary classes upto 10th standard in Government, Government aided schools, Special Training Centres, Madarasas and Maktabs supported under the Sarva Shiksha Abhiyan.

The Scheme was introduced during 1982 with the following objectives of

- ✓ To prevent class room hunger and facilitate healthy growth of the children
- ✓ To motivate children from economically backward families to pursue education.
- ✓ To improve the nutritional and health status of children
- ✓ To reduce incidence of mortality, morbidity and malnutrition.
- ✓ To promote school participation and reduce school dropouts.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

- பள்ளி செல்லும் குழந்தைகளிடையே உள்ள ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் உணவு பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு, சத்துணவு வழங்கும்

திட்டம், இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழ்நாட்டில் தான் அறிமுகம் செய்யப்பட்டது.

- அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், சர்வ சிக்ஷ அபியான் திட்டத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிற்சி மையங்கள், மதரசாக்கள் மற்றும் மக்தப்களில் பயிலும் துவக்கப்பள்ளிக் குழந்தைகள் மற்றும் உயர்துவக்கப்பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் மூலம் அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது.

**இத்திட்டம் கீழ்காணும் நோக்கங்களுக்காக 1982 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது:**

- வகுப்பறையில் குழந்தைகள் பசியோடு இருப்பதைத் தவிர்த்து அவர்கள் ஆரோக்கியமாக வளர்வதற்கு செய்தல்
- பொருளாதரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகள் முறையான கல்வியினைக் கற்க ஊக்குவித்தல்
- குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையினை மேம்படுத்துதல்
- சாலைகள்:
- சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்:
- இணைப்புச் சாலைகள்:
- சுடுகாடு / இடுகாடு:
- சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல்:

## 49. Chief Minister's Solar Powered Green House Scheme
**முதலமைச்சரின் சூரிய சக்தி பசுமை வீடுகள் திட்டம்**

The Government of Tamil Nadu had launched a landmark scheme called 'Chief Minister's Solar Powered Green House Scheme' during the year 2011-12 with the objective of construction of houses measuring about 300 sq.ft. at an unit cost of Rs.1.80 lakh, which is entirely funded by the State Government.

amount enhanced from Rs.1.80 lakh to Rs.2.10 lakh from the year 2013-14. Out of the total cost, the cost of construction will be Rs.1.80 lakh and Rs.30,000 is earmarked for installation of Solar Powered Home Lighting System which is being done directly by the Tamil Nadu Energy Development Agency (TEDA) in co-ordination with the Project Directors of District Rural Development Agencies.

### Eligibility of the Beneficiaries

- ✓ The beneficiary should;
- ✓ Reside within the Village Panchayat

- ✓ Find a place in the BPL permanent wait list of the Village Panchayat
- ✓ Own a site of not less than 300 sq.ft. area
- ✓ Have clear patta for the site in the name of the head of the family or any other member of the household
- ✓ Not own any other pucca concrete house in the village or elsewhere
- ✓ Not have been benefited under any other housing scheme of the Government.

- ஆண்டு: 2011-12
- 300 சதுர அடி
- தொகை:₹180 இலட்சம்
- ஆண்டு : 2013 – 14
- தொகை : ₹1.80 இலட்சத்திலிருந்து - ₹2.10 இலட்சமாக உயர்த்தப்படும்
- 1.80 வீடு கட்டுவதற்கும்
- **30.000** சூரிய மின்சக்தி அமைக்க
- தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையானது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து இப்பணியினை மேற்கொள்ளும்.

**Eligibility of the Beneficiaries**

- ✓ The beneficiary should;
- ✓ Reside within the Village Panchayat
- ✓ Find a place in the BPL permanent wait list of the Village Panchayat
- ✓ Own a site of not less than 300 sq.ft. area
- ✓ Have clear patta for the site in the name of the head of the family or any other member of the household
- ✓ Not own any other pucca concrete house in the village or elsewhere
- ✓ Not have been benefited under any other housing scheme of the Government.

## 50. Indira Awas Yojana

Indira Awas Yojna is in implementation since 1985-86. the objective is to provide financial assistance for construction and / or Upgradation of dwelling units (houses) to the BPL rural households of SC & ST and freed bonded laborers.

Non SC & ST people were covered from 1993-94 onwards, on condition that the allocation for Non SC/ST is not more than 40%.

Aim of Indira Awaas Yojana is to provide financial assistance to the rural poor living Below the Poverty Line (BPL) for construction of a house.

**இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு அங்கமாக இருந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் (Indira Awass Yojana) ஒரு மத்திய அரசு திட்டமாகும். இத்திட்டம் 1997 – 98 ஆம் ஆண்டு முதல் தனித்திட்டமாக உருவாகியது. கிராமப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும், வீடில்லாத ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடி மைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித்தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள், தேர்வு செய்யப்படுகின்றனர்.

இத்திட்டத்திற்கான ஒரு நிதியாண்டின் மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 60 விழுக்காடு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு (SC/ST) புதிய வீடுகள் மற்றும் கச்சா வீடுகளை மேம்பாடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40 விழுக்காடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

மொத்த வீடுகளில் 15 விழுக்காட்டினை சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இனங்களில் 3 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 2014 – 15 வரை 75 : 25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒவ்வொரு வீடும் 210 சதுர அடி பரப்பளவில் கட்டப்படுகிறது.

## 51. THANE Housing Scheme
**தானே வீட்டு வசதித் திட்டம்**

The cyclonic storm "Thane" which hit the State in December 2011 had damaged lakhs of houses and also affected the livelihoods of lakhs of families. Hence, the Government had launched a **'Thane Housing Scheme'** for the benefit of the people affected by the most severe cyclonic storm in the rural areas of Cuddalore and Villupuram Districts.

The Government ordered for the construction of 1 lakh concrete houses at a cost of Rs. 1,000 crore to replace damaged houses in the Thane Cyclone affected Districts of Cuddalore and Villupuram.

**தானே வீடு வழங்கும் திட்டம்:**

தமிழ்நாட்டில் டிசம்பர் 2011-ஆம் ஆண்டு "தானே" புயல் காற்று உருவாகி லட்சக்கணக்கான வீடுகளை சேதப்படுத்தியதோடு லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் பாதித்தது. எனவே, தமிழக அரசு, கடுமையான தானே புயலினால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட, ஊரக மக்கள் பயனடையும் வகையில் "தானே வீடு வழங்கும் திட்டம்" என்ற திட்டத்தை துவக்கியது.

தமிழக அரசு "தானே" புயல் காற்றினால் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வீடுகளை மாற்றியமைக்கும் பொருட்டு ரூ. 1000 கோடி மதிப்பீட்டில், 1,00,000 கான்கிரீட் வீடுகள் கட்ட ஆணையிட்டது.

### 52. Tamil Nadu Water Resources Conservation and Augmentation Mission – Kudimaramathu

The Honb'le Chief Minister has announced Tamil Nadu Water Resources Conservation and Augmentation Mission – Kudimaramathu – Participatory Programme on the floor of Legislative Assembly held on 20.07.2019.

### 53. PURA

Ministry of Rural Development (MoRD), Government of India has re-launched the scheme "Provision of Urban Amenities in Rural Areas" (PURA) as a Central Sector scheme during remaining period of the XI Plan.

MoRD with support from Department of Economic Affairs and the technical assistance of Asian Development Bank intends to implement the PURA scheme under a Public Private Partnership (PPP) framework between Gram Panchayat(s) and private sector partners.

The scheme envisages twinning of rural infrastructure development with economic re-generation activities and is the first attempt at delivering a basket of infrastructure and amenities through PPP in the rural areas.

இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், 'ஊரகப் பகுதிகளுக்கு நகர்ப்புற வசதிகளை வழங்கும் (PURA-புறா)' திட்டத்தை பதினோறாவது ஐந்தாண்டு திட்டத்தின் எஞ்சிய காலத்திலும் செயல்படுத்தும் பொருட்டு, ஒரு மத்திய அரசு திட்டமாக மீண்டும் தொடங்கி வைத்துள்ளது.

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம், பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் உதவியுடனும், ஆசிய வளர்ச்சி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடனும், இந்த 'புறா' திட்டத்தை, கிராம பஞ்சாயத்துகள் மற்றும் தனியார் துறை பங்களிப்பாளர்களுக்கு இடையே பொதுத் துறை மற்றும் தனியார் துறை பங்களிப்பு கூட்டாண்மை அடிப்படையில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டமானது ஊரக கட்டமைப்பு வளர்ச்சியை பொருளாதார மறு உற்பத்தி நடவடிக்கைகளுடன் இணைக்க முயலுகிறது. இந்தத் திட்டம் ஊரகப் பகுதிகளில் பொதுத்துறை மற்றும் தனியார் துறை கூட்டாண்மை முறையில் நிறைய எண்ணிக்கையிலான கட்டமைப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதற்கான முதற்கட்ட முயற்சியாகும்.

## 54. RURBAN

The Union Cabinet has approved Shyama Prasad Mukherjee Rurban mission (SPMRM) for its ambitious bid to spur social, economic and infrastructure development in rural areas.

**Twin objectives:**

It seeks to achieve of strengthening rural areas and de burdening the urban areas. Thus it seeks for balanced regional development and growth of the country by simultaneously benefiting the rural as well as urban areas of the country.

The State Governments would identify the clusters which have latent potential for growth in accordance with the Framework for Implementation. This framework will be prepared by the Union Ministry of Rural Development.

மத்திய அமைச்சரவை, சியாமா பிரசாத் முகர்ஜி ரர்பன் இயக்கத்தை (Shyama Prasad Mukherjee Rurban mission), ஊரகப் பகுதிகளில் சமூக, பொருளாதார மற்றும் கட்டமைப்பு வளர்ச்சிகளை மேற்கொள்வதான அதனுடைய இலட்சிய முயற்சிக்காக அதனை அங்கீகரித்துள்ளது.

**இரட்டை நோக்கங்கள்**:

இது ஊரகப் பகுதிகளை வலுப்படுத்துதல் மற்றும் நகர்ப் பகுதிகளின் சுமையைக் குறைத்தல் ஆகிய இரட்டை நோக்கங்களை நிறைவேற்ற முனைந்துள்ளது.

இவ்வாறாக, நாட்டின் ஊரகப் பகுதிகள் மற்றும் நகர்ப் பகுதிகள் ஆகிய இரண்டிற்கும் ஒரே சமயத்தில் பலன் அளிக்கச் செய்வதன் வாயிலாக, இது நாட்டின் வளர்ச்சி மற்றும் பிராந்திய வளர்ச்சியை ஒரே சீராக அடைய முயற்சிக்கிறது.

மாநில அரசுகள், செயலாக்கத்திற்கு ஏற்ற கட்டமைப்புக்கு ஏற்ப வளர்ச்சிக்கு உள்ளுரை ஆற்றலைக் கொண்டுள்ள தொகுப்புகளை அடையாளம் காணும் பணியை மேற்கொள்ளும்.

## 55. Tsunami emergency Assistance Project (TEAP)

The main objective of the Project was to support the efforts of the Government of Tamil Nadu to accelerate economic growth and poverty alleviation in the Tsunami affected areas of the State by assisting in the restoration of livelihoods, especially for the poor , disabled ,complementary rehabilitation and reconstruction of damaged public infrastructure.

சுனாமி பாதித்த பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பை துரிதப்படுத்தும் தமிழக அரசின் முயற்சிகளை ஆதரிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். குறிப்பாக ஏழை ஊனமுற்றோருக்கான வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதற்கு உதவுதல் மற்றும் சேதமடைந்த பொது உள்கட்டமைப்பை புனரமைத்தல்

## 56. Emergency Tsunami Reconstruction Project (ETRP)

This project was originally started in 2005 with the loan assistance of the World Bank. This project is a component of the programme of recovery and reconstruction implemented by the State Government to mitigate the impact of the Tsunami.

இந்த திட்டம் முதலில் 2005இல் உலக வங்கியின் கடன் உதவியுடன் தொடங்கப்பட்டது. இந்த திட்டம் சுனாமியின் தாக்கத்தை குறைக்க மாநில அரசால் செயல்படுத்தப்பட்ட மீட்பு மற்றும் புனரமைப்பு திட்டத்தின் ஒரு அங்கமாகும்.

## 57. International fund for Agricultural Development – Assisted Post Tsunami Sustainable Livelihood Programme

TNCDW is the nodal agency for implementing the International Fund for Agricultural Development (IFAD) assisted Post Tsunami Sustainable Livelihood Programme (PTSLP)

The objective of PTSLP is to build self-reliant, coastal communities which are able to manage their livelihood in a sustainable manner. This would be achieved by developing viable enterprises and resource management systems.

TNCDW என்பது சர்வதேச விவசாய மேம்பாட்டு நிதி (IFAD) உதவியுடன் சுனாமிக்குப் பிந்தைய நிலையான வாழ்வாதாரத் திட்டத்தை (PTSLP) செயல்படுத்துவதற்கான முக்கிய நிறுவனமாகும்.

PTSLP இன் நோக்கம் தன்னிறைவான, கடலோர சமூகங்களை உருவாக்குவது ஆகும்.

## 58. Pudhu Vaazhvu Project
**புது வாழ்வுத் திட்டம்**

Pudhu Vaazhvu Project was launched in Tamil Nadu on 15th November ‘2005 This pioneering poverty eradication initiative of Government of Tamil Nadu is being implemented with financial assistance from the World Bank.

Pudhu Vaazhvu’ Project (PVP) was introduced by the Government of Tamil Nadu under its Tamil Nadu Empowerment and Poverty Reduction project, Department of Rural Development, in 2005.

The main objective of the PVP project is to address the twin challenges of improving livelihood opportunities for the poor and vulnerable groups and building an enabling environment at the village level that would promote the empowerment of this disadvantaged population in the project area.

Tamil Nadu Rural Transformation Project is a World Bank funded project which is in continuation of Tamil Nadu Pudhu Vaazhvu Project. The main objectives of the project are to promote rural enterprises, access to finance and employment opportunities in 120 Blocks of Tamil Nadu. This project is funded by World Bank and State Government in the ratio of 70:30 at an estimate cost of Rs.918.20 crore.

**புதுவாழ்வு திட்டம்:**

- ✓ புதுவாழ்வு திட்டம் நவம்பர் 15 ஆம் 2005ம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டது.

ஏழ்மையை களைவதற்கான முன்னோடித் திட்டமான இது உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

- ✓ ஏழை, எளிய மக்களை உள்ளடக்கிய மக்கள் அமைப்புகளைத் தோற்றுவித்து, வங்கிகளின் மூலம் அவர்களுக்கு தேவைப்படும் நிதி ஆதாரத்தைப் பெற்றுத்தந்து, வாழ்வாதாரத்தையும் ஆற்றலையும் மேம்படுத்தி, மீண்டும் இவர்கள் ஏழ்மை நிலைக்கு உள்ளாவதை தவிர்க்கும் பொருட்டு, பிற சமூக பாதுகாப்பு திட்டங்களில் இருந்து உரிய உரிமைகள் மற்றும் பலன்களை அடைய செய்யும் பல்முனை வறுமை போக்கும் அணுகுமுறையை இத்திட்டம் பின்பற்றி வருகிறது.

- ✓ இத்திட்டத்தின் கீழ் வறுமை ஒழிப்பு செயல்பாடுகள் அனைத்தும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்தத் தொழில் குழுக்கள் / கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் போன்ற மக்கள் அமைப்புகள் வாயிலாகவே செயல்படுத்தப்படுகின்றன.

## 59. Self Sufficiency Scheme
**தன்னிறைவுத் திட்டம்**

**Self Sufficiency Scheme**

Self Sufficiency Scheme is being implemented by the Government from 2011-12 onwards to encourage increased public participation in creation and maintenance of community infrastructure.

Self Sufficiency Scheme is being implemented both in rural and urban areas.
Public participation

The minimum public contribution for any of the identified work should be one-third of the estimate amount.

- ✓ உருவாக்கப்பட்ட சமுதாய சொத்துக்கள் நிலைத்திருப்பதற்கு பொது மக்களின் பங்கேற்பு அவசியமானதாகும். பொது மக்களின் பங்களிப்பை ஊக்கப்படுத்தி அதன் மூலம் சமுதாயக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், பராமரிக்கவும் தன்னிறைவுத் திட்டத்தினை 2011 – 12ம் ஆண்டு முதல் இந்த அரசு செயல்படுத்துகிறது.

- ✓ தன்னிறைவுத் திட்டம், ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

# BOARD AND COMMISSIONS

## 60. Objectives of Tamil Nadu State Commission for Women
**தமிழ்நாடு மாநில பெண்கள் ஆணையத்தின் நோக்கங்கள்**

In the year 1993, the Tamil Nadu State Commission for Women, which is a Statutory body was constituted to deal with the cases related to crime against women. A chairperson and 9 members have been appointed.

**The objectives of the Commission are –**

- ✓ To provide protection and ensure welfare of women.
- ✓ To address the gender issues.
- ✓ To recommend to the Government on various issues related to women.
- ✓ The Tamil Nadu government has reconstituted the State Commission for Women with Gowri Ashokan as its Chairperson. Kannagi packiyanathan
- ✓ The Chairperson and the Members of the Commission will hold office for three years.

- ✓ பெண்களுக்கு எதிரான குற்றம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தில் மாநில மகளிர் ஆணையத் தலைவி மற்றும் 9 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

**ஆணையத்தின் குறிக்கோள்கள்:**

1. மகளிரின் நலநன உறுதி செய்து அவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்
2. பாலினம் குறித்த விவகாரங்களை கவனித்தல்
3. பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக ஆணையத்தின் பரிந்துரையை அரசுக்கு அனுப்பிவைத்தல்

## 61. Tamil Nadu Social Welfare Board
**தமிழ்நாடு சமூக நல வாரியம்**

The Tamil Nadu Social Welfare Board was constituted in 1954. It has been working for the development of women and children through voluntary institutions in the State with the following objectives.

1. To encourage voluntary efforts by Non-Governmental Organization in the field of women and child development.

2. To render technical and financial assistance to the voluntary institutions for improved quality and standard of services.

3. To monitor the programmes aided by Central Social Welfare Board and the programmes allotted by the State Government for effective implementation.

தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954ஆம் ஆண்டு மகளிர் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு உதவும் பொருட்டு தொடங்கப்பட்டது. மகளிர் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் பின்வரும் நோக்கங்களுடன் இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது.

1. மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான அரசு சாரா நிறுவனங்களின் தன்னார்வ முயற்சிகளை ஊக்குவித்து மேம்படுத்துதல்.
2. தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவியும் அளித்து அவற்றின் சேவையின் தரத்தையும் மதிப்பையும் உயர்த்துதல்.
3. மாநில மற்றும் மத்திய சமூக நல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதை கண்காணித்தல்

**62. Tamil Nadu third Genders Welfare Board**
**தமிழ்நாடு மூன்றாம் பாலினத்தவர்கள் நல வாரியம்**

**TAMILNADU THIRD GENDERS WELFARE BOARD – 2008**

To empower the Third Genders economically, bank loans upto ` 15.00 lakh with 25% subsidy are provided to the Third Genders Self Help Groups to take up income generating activities.

As a first of its kind in India, The Hon"ble Chief Minister has introduced a Pension scheme for destitute Third Genders who are above 40 years. wherein ₹ 1,000 is paid as monthly pension.

"Third Gender Day" which falls on 15th April of every year.

Five third genders are recruited as Sub Inspector and Constables in Police Department and two third genders are posted as Physiotherapist and Lab Assistant in Health Department.

In the Social Welfare Department, two third genders have been appointed as Nutritious Meal Organizer and Cook. Two of them have been appointed as Office Assistant and Jeep Driver. Further, eight Third

genders have been appointed as Security guard in Government Medical College, Thanjavur District.

**தமிழ்நாடு மூன்றாம பாலினத்தவர்கள் நல வாரியம் - 2008**

மூன்றாம் பாலினத்தவர், பல்வேறு இன்னல்கள் மற்றும் கொடுமைகளால் பாதிக்கப்படுவதோடு மட்டுமில்லாமல் அவர்களுக்கு பல உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. மூன்றாம் பாலினமாக மாறும் நிலையில் பள்ளிக்கூடத்திலிருந்து கூட வெளியேற்றப்படுகிறார்கள்.

மூன்றாம் பாலினத்தினருக்கு எதிராக உள்ள நெடுங்காலத்தைய பாகுபாட்டின் காரணமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பணிப்பாதுகாப்பு போன்றவை மறுக்கப்படுகின்றன.

மூன்றாம் பாலினத்தவர் தங்களது வாழ்வாதாரத்தை, பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்ளும் பொருட்டு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ள அவர்களின் சுய உதவிகுழுக்களுக்கு 25 சதவிகித மானியத்துடன் ஹ15 இலட்சம் வரை வங்கிக் கடன் அளிக்கப்படுகிறது.

## 63. Tamil Nadu Backward Classes Commission
**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம்**

The Tamil Nadu Backward Classes Commission has been constituted as a permanent body under Article 16(4) read with Article 340 of the Constitution of India, pursuant to the directions of the Supreme Court of India in Indra Sawhney and others Vs. Union of India and others (J.T. 1992 (6) SC 273), known as Mandal Case. The Commission functions from 15.3.1993, under the Chairmanship of Retired Judge of High Court.

The functions of the Commission are quasijudicial in nature. The terms of reference for the Tamil Nadu Backward Classes Commission are as follows:-

1. The Commission shall entertain, examine and recommend upon requests for inclusion and complaints of over-inclusion and under-inclusion in the lists of Backward Classes / Most Backward Classes.
2. Periodic revision of list of Backward Classes and Most Backward Classes in this State as and when decided.
3. The Commission shall base its recommendations in the light of the provision contained in Article 16(4) read with relevant provisions of the Constitution of India and the various decisions of the Supreme Court bearing on the subject.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி மற்றும் பிறர் - எதிர் - இந்திய யூனியன் மற்றும் பிறர் (J.T. 1992 (6) SC 273) என்கிற மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு 16(4)ன் கீழ், கூறு 340 உடன் படிக்கப்பட்டு, ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, 15.3.1993 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை-சார்புடைய (qusasi-judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல்-வரம்புகளாவன:-

i. பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்கும் ;
ii. அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் /மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்யும்;
iii. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் இதர பிற தொடர்படைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமையவேண்டும் ;

## 64. Tamil Nadu State Commission for Protection of Child Rights

**தமிழ்நாடு மாநில குழந்தைகளின் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் முக்கிய நோக்கங்கள்**

- ✓ **Tamil Nadu State Commission For Protection Of Child Rights** constituted based on the commission for protection of child rights act 2005
- ✓ To identify the problems of children who need special care and protection and who are in difficult circumstances, juvenile in conflict with law, homeless children, children whose parents are placed under custody etc., and to recommend the proper action to be taken for resolving the problems.

இடர்ப்பாடுகளிலுள்ள குழந்தைகள், விளிம்புநிலை மற்றும் பாதகமான சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்ட குழந்தைகள், இளைஞர்கள், குடும்பமற்ற குழந்தைகள் மற்றும் சிறையில் உள்ளோரின் குழந்தைகள் போன்ற சிறப்பு பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகளின் பிரச்சனைகளை கண்டறிந்து, அதன் தீர்வுக்கான தகுந்த நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

**65. Tamil Nadu Housing Board**
**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**

City Improvement Trust was formed in 1947 to cater the housing needs of Madras City. Later, in 1961, it was reorganised as Tamil Nadu Housing Board to fulfil the housing needs throughout the State. The main motto of Tamil Nadu Housing Board is to provide **"Housing for All".**

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**

சென்னை நகரின் வீட்டுவசதித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 1947 ஆம் ஆண்டு நகர அபிவிருத்திக் குழுமம் துவங்கப்பட்டது. பிறகு, மாநிலத்தின் வீட்டு வசதித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அது 1961-ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமாக மாற்றி அமைக்கப்பட்டது. "அனைவருக்கும் வீட்டு வசதி" என்பதே வீட்டுவசதி வாரியத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

**66. Tamil Nadu Slum Clearance Board**
**தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்**

Tamil Nadu Slum Clearance Board was established in September, 1970 and has been implementing various Housing, Slum Development and Rehabilitation and Resettlement programmes to ameliorate the living conditions of the slum families in Tamil Nadu.

The Board initially started its activities in Chennai and were gradually extended to other urban areas of Tamil Nadu since 1984 onwards in phased manner.

**தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்**

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் தொடங்கப்பட்டு, தமிழகத்தின் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த பல்வேறு வீட்டு வசதி, குடிசைப்பகுதி மேம்பாடு, மறுவாழ்வு மற்றும் மாறுகுடியமர்வு திட்டப்பணிகளைச் செயல்படுத்தி வருகின்றது.

வாரியத்தின் பணிகள் முதலில் சென்னை நகரில் செயல்படுத்தப்பட்டு, 1984-ஆம் ஆண்டு முதல் படிப்படியாக தமிழகத்திலுள்ள இதர நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

**67. TAHDCO**

Tamil Nadu Adi Dravidar Housing and Development Corporation (TAHDCO) was commissioned in 1974 under the Companies Act, 1956

initially as a construction company for construction of fire proof houses for the people of Scheduled Caste.
Since 1980-81, the Corporation has also been involved in socio economic development activities for the benefit of Adi Dravidar people.

**OBJECTIVES**

1. Construction Activities.
2. Economic Development Activities
3. Training–both Skill Development & upgradation and top class education.

**SCHEMES IMPLEMENTED FOR ADI DRAVIDARS THROUGH TAHDCO:**

1. Land Purchase Scheme exclusively for women
2. Land Development Scheme
3. Entrepreneur Development Programme (EDP)
4. Special Scheme under EDP – Assistance for Petrol / Diesel / Gas retail outlets
5. Self Employment Programme for Youth ( SEPY)
6. Self Employment Programme for Youth – SEPY Special – for Medical and Paramedical establishments.
7. Revolving Fund to women Self Help Groups.
8. Economic Assistance to women Self Help Groups.
9. Financial Assistance to Civil Services aspirants (UPSC)
10. Financial Assistance to State Civil Service aspirants (TNPSC Group-I)
11. Financial Assistance to Law Graduates to set up their profession
12. Financial Assistance to Chartered Accountant / Cost Accountant to set up their profession.
13. Managing Director's Discretionary Fund
14. Collectors' Discretionary Fund.

**தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), 1974 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கு தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவதற்காக இந்திய நிறுவனச் சட்டம், 1956 இன் கீழ் நிறுவப்பட்டது.

1980-81 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களும் இந்நிறுவனத்தின் மூலமே செயல்படுத்தப்படுகின்றன.

**ஆதி திராவிட மக்களுக்காக தாட்கோவினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

1. நிலம் வாங்கும் திட்டம் (மகளிருக்கு மட்டும்)
2. நிலம் மேம்பாட்டுத் திட்டம்
3. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்
4. தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் - பெட்ரோல், டீசல், மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான சிறப்புத் திட்டம்
5. இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம்
6. இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த தொழில்களுக்கான நிதியுதவித் திட்டம்
7. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காகச் சுழல் நிதி
8. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கானப் பொருளாதார கடன் உதவித் திட்டம்
9. இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி
10. தமிழ்நாடு தேர்வாணையம் தொகுதி-1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு நிதி உதவி
11. இளம் சட்டப் பட்டதாரிகளுக்குச் சுயமாகத் தொழில் செய்வதற்காக நிதி உதவி
12. பட்டயக் கணக்குகள்/செலவுக் கணக்கர்கள் சுயமாக தொழில் புரிய நிதி உதவி
13. மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி
14. மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி

## 68. Tamil Nadu Cement Corporation
**தமிழ்நாடு சிமெண்ட் கழகம்**

Tamil Nadu Cements Corporation Limited (TANCEM) was incorporated on 11th February 1976 as a fully owned subsidiary of Tamilnadu Industrial Development Corporation Limited (TIDCO).

Subsequently, TANCEM became the Government company consequent to the transfer of shares held by TIDCO in favour of Government of Tamilnadu with effect from the year 1994.

**TANCEM Units**

1. Ariyalur Cement Unit, Ariyalur, Ariyalur District.
2. Alangulam Cement Unit, Alangulam, Virudhunagar District.
3. Tamil Nadu Asbestos (Sheet) Unit, Alangulam, Virudhunagar District.
4. Stoneware Pipe Factory, Vridhachalam, Cuddalore District.

APPOLO STUDY CENTRE

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) 1976 பிப்ரவரி 11ஆம் தேதி தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) ஒரு துணை நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது.
டிட்கோ நிறுவனம் வைத்திருந்த மூலதனப் பங்குகளை அரசுக்கு மாற்றி விட்டதால், அதன் தொடர்ச்சியாக 1994ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம், அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

**டான்செம் நிறுவனத்தின் ஆலைகள்**

1. அரியலூர் சிமெண்ட் ஆலை, அரியலூர் மாவட்டம்
2. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, ஆலங்குளம், விருதுநகர் மாவட்டம்
3. தமிழ்நாடு கல்நார் ஆலை (தகடு), ஆலங்குளம், விருதுநகர் மாவட்டம்
4. தமிழ்நாடு கற்குழாய் ஆலை, விருத்தாச்சலம், கடலூர் மாவட்டம்.

## 69. Tamil Nadu Minerals Limited (TAMIN)
**தமிழ்நாடு கனிம நிறுவனம்**

TAMIN – 1978

## 70. Sports Development Authority of Tamil Nadu
**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

### SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMIL NADU

Sports Development Authority of Tamil Nadu (SDAT) was formed in 1992 by the Government to promote sports among the masses as well as to achieve excellence in sports both at the National and International level.

Sports Development Authority of Tamil Nadu (SDAT) was constituted by merging the erstwhile Directorate of Sports and Youth Services and the Tamil Nadu State Sports Development Corporation.

The Hon'ble Chief Minister of Tamil Nadu is the President of this Authority.

**தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

- ✓ மக்களிடையே விளையாட்டின் மேம்படுத்தவும், விளையாட்டில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறப்பான நிலையினை எய்தவும் அரசால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 1992 –ல் உருவாக்கப்பட்டது.

- ✓ அதற்கு முன்னர் இயங்கி வந்த விளையாட்டு மற்றும் இளைஞர் நல இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம்

ஆகியவற்றை ஒருங்கிணைத்து ‘‘தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்’’ அமைக்கப்பட்டது.

- ✓ மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார்.

**71. Thanthai Periyar Award for Social Justice**
**சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது**

**THANTHAI PERIYAR AWARD FOR SOCIAL JUSTICE**

The Government is honouring those who fought for social justice in Tamil Nadu with Thanthai Periyar Award for social justice. This award instituted in the year 1994, is awarded to a person selected by Hon'ble Chief Minister since 1995.

Thanthai Periyar Award for Social Justice for the year 2018 has been awarded to Thiru C. Ponnaiyan.

Thanthai Periyar Award for Social Justice for the year 2019 has been awarded to Thiru Gingee N.Ramachandran.

**சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது**

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது **1994** ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு, **1995** ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

**72. "Manitha Neya Vara Vizha**
**மனித நேய வார விழா**

Manitha Neya Vara Vizha" is celebrated in all the districts from 26th to 30th January every year for creating awareness among the people

This amount has been enhanced to Rs.50,000/- at district level and Rs.1,00,000 at state level. Publicity is given through Villupattu Artists on the evils of untouchability.

Besides this, Community feasts are also arranged every year on 26th January, 15th August, 2nd October and on any other important local holiday in the districts. Voluntary organisations are involved in arranging the Samabandhi Virundhu / Community feasts.

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 முதல் 30 வரை மனித நேய வார விழா எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தீண்டாமையின் கொடுமைகளை விளக்குவதற்காக வில்லுப்பாட்டு கலை நிகழ்ச்சியின் வாயிலாக போதிய அளவுக்கு விளம்பரம் கொடுக்கப்படுகிறது.

அத்துடன், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 மற்றும் அந்த மாவட்டத்தில் நடைபெறும் ஏதேனும் முக்கியமான உள்ளூர் விடுமுறைகளின்போது சமூக விருந்துகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த சமூக விருந்துகள் ∴ சமபந்தி விருந்துகளை ஏற்பாடு செய்வதில் தன்னார்வ அமைப்புகளும் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றன.

## 73. Important Days

| | | |
|---|---|---|
| 1. | January $24^{th}$ | National Day for the Girl Child |
| 2. | February $24^{th}$ | State Girl Child Protection Day |
| 3. | March $8^{th}$ | International Day for the Women |
| 4. | April $15^{th}$ | Third Gender Day |
| 5. | June $12^{th}$ | Anti Child Labour Day |
| 6. | June $15^{th}$ | World Elder Abuse Awareness Day |
| 7. | October $1^{st}$ | International Day of Older Persons |
| 8. | November $14^{th}$ | Children's Day |
| 9. | November $20^{th}$ | Universal Child Rights Day |
| 10. | November $26^{th}$ | Dowry Prohibition Day |

**APPOLO STUDY CENTRE**
No.25, Nandhi Loop Street,
West C.I.T. Nagar, Chennai – 600 035
Near T.Nagar Bus Stand,
Landmark: Nandhi Statue
Ph: 24339436, 42867555, 9840226187
E-mail: appolotnpsc@gmail.com
Website: **www.appolosupport.com**
**www.appolotraining.com**